Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    ஆடி 10    [ 25-07-1993 ]    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 157

## 50,000 அரசாங்க ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகள் இல்லை

தற்போது அரசாங்க பாடசாலைகளில் கடமைபுரியும் சுமார் 50,000 ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகளைக் காணவில்லை என தகவல் ஒன்று தெரிவிக்கிறது. இதனால் இவ் ஆசிரியர்கள் சம்பள உயர்வு, இடமாற்றம் பெறல், ஒய்வு பெறல் போன்றவற்றிற்கு பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர். புதிதாக நியமனம் பெற்றவர்களின் சுயவிபரக் கோவைகளைவிட பல வருடங்களாக சேவையில் இருப்பவர்களின் சுயவிபரக் கோவைகளே இவ்வாறு காணாமல் போயுள்ளன. பிராந்திய கல்வி அலுவலகங்களிலிருந்து மாவட்ட கல்வி அலுவலகங்களுக்கு இக்கோவைகள் மாற்றப்படும்போது இவை தொலைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# புத்தளத்தில் மீண்டும் புலிகள் அதிரடி; பத்து பொலிசார் பலி; பலர் படுகாயம்

## காவல் நிலைகள் அழிப்பு

[நமது நிருபர்]

புத்தளம் மாவட்டத்திலுள்ள இலவன்குளம் ஊறல்ப்பிட்டியளை என்ற இடத்தில் நேற்று விடுதலைப்புலிகள் நடத்திய துணிகர அதிரடித்தாக்குதலில் குறைந்தது 10 சிறிலங்கா பொலிசார் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்த ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. பொலிசாரின் இரு காவலரண்களும் இரு வீடுகளும் தரைமட்டமாக்கப்பட்டு எரிக்கப்டன. ஐந்து நிமிடநேரம் மட்டுமே இடம்பெற்ற இவ் வெற்றிகரத் தாக்குதலில் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை. இருவாரத்திற்குள் இதே பகுதியில் புலிகள் நடாத்திய இரண்டாவது வெற்றிகரத் தாக்குதல் இதுவாகும்.

இத்தாக்குதல்பற்றி மேலும் தெரியவருவதாவது; இலவன்குளம் ஊறல்ப்பிட்டியளை பகுதியில் பொலிசார் காவல்புரியவென அமைக்கப்பட்டிருந்த காவலரண்களில் ஏற்கனவே உட்சென்று பதுங்கியிருந்த விடுதலைப் புலிகள் அங்கு காவலுக்கென வந்துகொண்டிருந்த பொலிசார் மீது தாக்குதல் நடத்தினர். காலை 6.10க்கு ஆரம்பித்த இத் தாக்குதல் ஐந்து நிமிட நேரம் மட்டுமே நீடித்தது.

இதேவேளை, இப்பகுதியில் விடுதலைப் புலிகளை தாக்குவதற்காக சிறிலங்கா பொலிசார் இரவிரவாக பதுங்கியிருந்ததாகவும் எவரும் வராததால் விடியற் காலையில் முயற்சியை கைவிட்ட நிலையில் இருந்த போது புலிகள் திடீரென அவர்கள் மீது தாக்குதல் நடாத்த தொடங்கியதாகவும் பி.பி.ஸி. தெரிவித்தது.

இத் தாக்குதலில் குறைந்தது 10 பொலிசார் பலியாகினர். ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர். விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை.

இதேவேளை இத்தாக்குதலை சிறிலங்கா கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் ஊர்ஜிதம் செய்துள்ளதுடன் ஒன்பதுபொலிசார் பலியாகியதாகவும் அறிவித்துள்ளது.

மேலும் இப்பகுதி காடுகளில் பலத்த தேடுதல் வேட்டை நடாத்தப்படுவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இரு வாரத்திற்குள்இப்பகுதியில் இடம்பெற்ற இரண்டாவது தாக்குதல் இதுவாகும். முதல் தாக்குதலில் ஓர் இராணுவம் உட்பட ஐந்து படையினர் பலியாகியதும் பல பொலிசார் காணாமல் போனதும் தெரிந்ததே.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

புத்தளம் மாவட்டம் இலவன்குளம் ஊறல்ப்பிட்டியளை என்ற இடத்தில் நேற்று சிறிலங்கா பொலிசார் மீது புலிகள் நடாத்திய தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ கைக்குண்டு — 02
- ★ தலைக்கவசம் — 01
- ★ தண்ணீர்க்கான் — 01
- ★ பாக் — 02
- ★ பெலிட் — 02

## பரீட்சை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

'சேவை மூப்பு' அடிப்படையில் எழுதுனர்சேவையின் அதிசிறப்புத் தரத்திற்கான பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

இத்தகவலை பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இப் பரீட்சை எதிர் வரும் 31ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருந்தது குறிப்பிடத்தக்கது. (தி)

## மேலும் ஒருவர் வந்து சேர்ந்தார்

[வவுனியா]

கண்டி பல்லேகல தடுப்பு முகாமிலிருந்து கடந்த 14ஆம் திகதி விடுவிக்கப்பட்ட ஒருவர் நேற்று வவுனியா ஊடாக வட

(3ஆம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளம் தடை முகாமில் ஏழுபேர் தடுத்துவைப்பு

வவுனியாவில் நேற்று தடை செய்யப்பட்ட பொருள்களுடன் வந்ததாகக் கூறப்படும ஏழுபேரை சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்து தாண்டிக்குளம் முகாமில் தடுத்து வைத்துள்ளனர். இவர்கள் மன்னார் வீதியால் அனுப்பப்படுவார்கள் என தெரிய வருகிறது.

இதேவேளை நேற்றும் வவுனியா நகர் செல்லும்பிரயாணிகளை நொச்சிமோட்டை பாடசாலைக்கு எதிரேயுள்ள வயல் வெளிப் பாதையினூடாகவே செல்ல அனுமதித்தனர்.

க.பொ.த. (சா / த.) பெறுபேறுகள்

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

[கொழும்பு]

அரசாங்க மற்றும உள்ளூராட்சி பொது எழுது வினைஞர் சேவை இரண்டாம் தரத்திற்கான தகுதிகாண் பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 30ஆம் திகதி என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும் இதற்கான பரீட்சை அடுத்த மாதம் 18ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## கறுப்பு ஜூலை நாள் நினைவுக் கூட்டம்

1983-ம் ஆண்டு ஜூலை 25-ம், 27-ம் நாட்களில் சிங்கள இனவாத அரசு வெறிகொண்டு 53 தமிழர்களை படுகொலை செய்தும் சொத்துக்களை சூறையாடிய நாட்களை நினைவுகூரும் கூட்டம் தென்மராட்சி கோட்டத்தில் கைதடி நுணாவில் வைரவர் கோவில் முன்பாக இன்று இரவு 8-00 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ் நினைவுக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் மற்றும் பலரும் நினைவுரை யாற்றவுள்ளனர்.

## கறுப்பு ஜூலை நாள் லண்டனில் ஊர்வலம்

[லண்டன்]

1983கறுப்புஜூலையை முன்னிட்டு நேற்று லண்டன் நகரில் மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கில் தமிழர் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

தமிழர் சர்வதேச சம்மேளனம் என்ற அமைப்பு இந்த ஊர்வலத்தை ஒழுங்கு படுத்தியிருந்தது. சிறிலங்கா அரசின் இன அழிப்புக் கொள்கையை மற்றும் பொருளாதாரத்தடை ஆகியவற்றை கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன. சிறிலங்கா அரசைக் கண்டிக்கும் சுலோகங்கள் எழுதிய பாதாகைகளையும் ஊர்வலத்தில் எடுத்துச் சென்றனர்.

## ஜனாதிபதியின் விஜயம் ரத்து

### கருத்துக் கூறுவதில் மந்திரிகளிடையே முரண்பாடு

சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜயதுங்க மட்டக்களப்பிற்கு வருகை தராததற்கு காரணம் கூறிய இரண்டு அமைச்சர்கள் ...

கொள்ளவில்லை எனத் தெரிவித்தார்.

இதேவேளை மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரியில் வைத்து

நடித்தது.

# கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

புத்தளம் மாவட்டம் இலவன்குளம் ஊற ல்ப்பிட்டியளை என்ற இடத்தில் நேற்று சிறிலங்கா பொலிசார் மீது புலிகள் நடாத்திய தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ ரி. 56-1 ரக துப்பாக்கிகள் — 10
★ ஏ. கே. ரவைக்கூடுகள் — 40
★ நடுத்தர ரவைகள் — 1334
★ ஏ. கே. கோல்சர் — 10
★ ஏ. கே. எல். எம். ஜி. கோல்சர் — 02
★ கைக்குண்டு — 02
★ தலைக்கவசம் — 01
★ தண்ணீர்க்கான் — 01
★ பாக் — 02
★ பெலிட் — 02
★ பொலிஸ் சப்பாத்து (சோடி) — 02
★ இராணுவ சப்பாத்து (சோடி) — 10
★ பொலிஸ் சீருடை (சோடி) — 04
★ புகைப்படக்கருவி — 01
★ பொலிஸ் பெலிட் — 01

ஏழுபேரை சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்து தாண்டிக்குளம் முகாமில் தடுத்து வைத்துள்ளனர். இவர்கள் மன்னார் வீதியால் அனுப்

னியா நகர் செல்லும்பிரயாணிகளை நொச்சிமோட்டை பாடசாலைக்கு எதிரேயுள்ள வயல் வெளிப் பாதையினூடாகவே செல்ல அனுமதித்தனர்.

க. பொ. த. (சா / த.) பெறுபேறுகள

## மீள்பரிசீலனை முடிவு தபாலில் சேர்ப்பு

கடந்த டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற க பொ. த சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளை மீள் பரிசீலனைக்காக, முறைப்பாடு செய்தவர்களின் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக பரீட்சைத்திணைக்களம் கூறியுள்ளது. இவ்வாறான மீள் பரிசீலனைக்காக 35,000 பேர் விண்ணப்பித்து இருந்ததாகவும், இவை பரிசீலிக்கப்பட்டு இவர்களது பெறுபேறுகள் தபாலில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் பரீட்சைத் திணைக்களம் மேலும் கூறியுள்ளது.

## மந்திரிகளிடையே முரண்பாடு

சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜயதுங்க மட்டக்களப்பிற்கு வருகை தராததற்கு காரணம் கூறிய இரண்டு அமைச்சர்கள் முரணான தகவல்களை கொடுத்துள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

மட்டக்களப்பு இந்து வித்தியாலயத்தில் வைத்து அமைச்சர் மன்சூர் கருத்துத் தெரிவிக்கையில; பாதுகாப்பிற்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் காரணமாகவே ஜனாதிபதி இடம்பெயர் சேவையில் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவித்தார்.

இதேவேளை மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரியில் வைத்து அமைச்சர் பெஸ்டஸ்பெரேரா கருத்துத் தெரிவிக்கையில்; பாதுகாப்பு காரணங்களுக்காக ஜனாதிபதி வரவில்லை என்பது தவறானது எனவும் வேறு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டியிருந்ததே அவரின் விஜயம் ரத்துச் செய்யப்பட்ட தன் காரணம் என தெரிவித்தார்.

தம்பிலுவிலில் ரோந்து சென்ற

## அதிரடிப்படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் தம்பிலுவிலில் லாண்றோவர் வாகனத்தில் ரோந்து சென்று கொண்டிருந்த சிறிலங்கா அதிரடிப்படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

கடந்த செவ்வாயன்று இரவு ஒன்பது மணியளவில் புலிகள் நடாத்திய இத்தாக்குதலில் லாண்றோவர் சேதமடைந்தது இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

## ஐ. ஐ. தே. மு. இணைப்பு அமைச்சர்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைப்பதற்கு ஆலோசிக்கப்படுவது தொடர்பாக பல அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். அவர்கள் தமது ஆட்சேபனையை சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர்களான, றேனுகா ஹேரத், விமல் விக்கிரமசிங்க, சிறிசேன குரே, தொண்டமான், காமினி அத்துக்கோறள ஆகியோரும் கண்டிமாவட்ட எம்.பி அப்துல்காதரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தனித்தனியே சந்தித்து தமது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளதாக 'யுக்திய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அவர்களது ஆட்சேபனையை முழுமையாக ஆதரிப்பதாகத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட்சியில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினரை இணைத்துக் கொள்வது உகந்த விடயமல்ல என்பதே தனது தனிப்பட்ட கருத்து என தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை இவர்கள் விரைவில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவிடம் தமது ஆட்சேபனையைத் தெரிவிக்க உள்ளதாகவும் 'யுக்திய' செய்தி வெளியிட்டுள்ளது.

## பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க கோரிக்கை

(கொழும்பு)

1991/92 ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றவர்களிடமிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விண்ணப்பங்களை கோரியுள்ளது. 180 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் விண்ணப்பிக்க தகைமை பெற்றவர்களாவர் என்றும், இவ்வாறு தகுதி பெற்றவர்கள் 18,000 பேர் இருக்கின்றனர் எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கூறியுள்ளது.

இவர்களுக்கு இவ் வருட இறுதிக்கு முன்பாக பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படும் எனவும் பல்கலைக்கழகமானிய ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் அலு அலுவிகார கூறியுள்ளார்.

## பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசு முயற்சி செய்கிறது

மட்டக்களப்பில் ரணில் தெரிவிப்பு

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பல முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

அங்குள்ள ஆடை தயாரிப்பு நிலையம் ஒன்றை சுற்றிப் பார்வையிட்ட அவர்பின்னர் பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் மேலும் கூறியதாவது;

உலகில் மிகவும் பழமை வாய்ந்த மொழிகளில் ஒன்றான தமிழ்மொழி தேசிய மொழியாக்கப்பட்டுள்ளது. பல்வேறு சமூகங்களினதும் சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப வேலை வாய்ப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. தோட்டப்பகுதி மக்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் கல்வியின் தரத்தை உயர்த்தவும் நடவடி

(3ஆம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவு காவலரண் மீது புலிகள் ஷெல் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

மண்டைதீவு பண்ணை வீதியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவ காவலரண் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைபுலிகளால் எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது இரவு 11.50மணியளவில மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலினால் இராணுவத் தரப்பிற்கு ஏற்பட்ட சேத விபரம் தெரியவரவில்லை.

இதனைத் தொடர்ந்து மண்டைதீவிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் ஆர் சி.எல். பீரங்கி மற்றும் ஐந்து அங்குல மோட்டார் செல் தாக்குதலையும் மேற்கொண்டனர். பரவலான துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

## ஒய்வுபெற்ற படையினரின் அமைப்பு உருவாக்க முயற்சி

(கொழும்பு)

இராணுவகடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ் படையில் சேவை புரிந்து ஓய்வு பெற்ற அனைவரையும ஒன்றிணைத்து அமைப்பொன்றை உருவாக்க சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் முயற்சி எடுத்து வருகின்றன.

தற்போது சிறிலங்கா படையினர் முகம் கொடுக்கும் பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்கு இவ்வாறு ஓய்வு பெற்றவர்களிடமிருந்து அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கு இந் நடவடிக்கை வழி வகுக்கும் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

இவ் அமைப்பில் உறுப்பினராக இணைந்து கொள்பவர்களுக்கு விசேட அலவன்ஸ் மற்றும் ஏனைய வசதிகளை செய்து கொடுக்கவும் அவர்கள் முன்வந்துள்ளனர். இதற்கான பணம் பாதுகாப்பு நிதியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

# 'புளொட்'டின் வதைமுகாம் வவுனியாவில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

வவுனியா நகரின் சுற்றாடலில் வைத்து புளொட் குழுவினரால் கடத்திச்செல்லப்பட்ட 47 பேர் புளொட் முகாமில் சங்கிலியால் கட்டிவைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதாக அங்கிருந்து தப்பிச்சென்ற ஒருவர் வவுனியா படை முகாமொன்றில் புகார் செய்துள்ளார். இத்தகவலை ''திவயின'' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டு குற்றுயிரான நிலையில் உழவு இயந்திரம் ஒன்றில் ஏற்றப்பட்டு முகாமிற்கு வெளியே கொண்டு செல்லப்பட்டதாகவும் அவர் மீண்டும் கொண்டு வரப்படவில்லை என்றும் தப்பி வந்தவர் கூறியுள்ளார்.

இவரின் சடலம் அழுகிய நிலையில் கடந்த 16ஆம்திகதி காத்தார் சின்னக்குளம் பகுதியில் கண்டெடுக்கப்பட்டதாகவும், துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகி இவர் இறந்திருக்கிறார் எனவும் இராணுவத்தினர் கூறியுள்ளனர். இறந்தவர் சொக்கலிங்கம் மனோரஞ்சன் [வயது21] எனவும் இவர் ஜூன்மாதம் 21ஆம் திகதி வவுனியா நகருக்கு சென்ற போது காணாமல் போனவர் எனவும் இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர்.

(3ஆம் பக்கம் பார்க்க)

## 2000 பொது எழுதுவினைஞர் நியமிக்க நடவடிக்கை

[கொழும்பு]

நாடு முழுவதும் சுமார் இரண்டாயிரம் பொது எழுதுவினைஞர் பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான போட்டிப் பரீட்சை இவ் வருட முற்பகுதியில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ் வெற்றிடங்களை நிரப்ப உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு அமைச்சர் பெஸ்ரஸ் பெரேரா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# வரி விளம்பரம்

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு5)

புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறு பேற்றைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் வாரந்தோறும் வெளியிடப்படும் அடுத்த வினாத்தாள் 25. 07. 93 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும் புதிய கல்வி நிலையம், 219. நாவலர் வீதி. யாழ்ப்பாணம். (5521)

### மிருதங்கம்

மிருதங்கம் நல்ல முறையில் உத்தரவாதத்துடன் ஒரு கிழமைக்குள் முழு வேலையும் செய்து பெற்றுக் கொள்ளலாம். கோவிந்தபிள்ளை விஜயகுமார், பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம் (5444)

### உடன் விற்பனைக்கு

10 நாட்கள் வளர்ச்சியடைந்த புறெயிலர் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி' மானிப்பாய். [5503]

### தேவை

வளர்ந்துவரும் உணவகத்திற்கு பெண் உதவியாளர்கள் தேவை. அனுபவமும்கல்வி அறிவும் மிக முககியம். அண்மையில் கிடைக்கப்பெற்ற நற்சான்று பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்க. முகாமையாளர், ஜெசித்தாரா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி (சி-7072)

### PUPS FOR SALE

Two black and tan two months old pure Irish breed Alsatian female pups for Salc Anandan Tham tharam-pillai street Sangaththanai Chavakachcheri. (5526)

---

## அரஸ் ஜவுளியகம்

அதிர்ஷ்டலாபச் சேமிடபுநிதி மீளளிப்பு பற்றிய

# அறிவித்தல்

எமது ஸ்தாபனத்தின் மேற்படி சேமிப்பு நிதியின் அங்கத்தவர்களுக்கு! உங்கள் புத்தக இலக்கங்களின் ஒழுங்கின்படி மண்டேலா ரேடர், இல 2, பஸ்நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் வைத்து பணம் மீளளிக்கப்படும். கீழே கொடுக்கப்பட்ட இலக்கங்களை உடையவர்களில் கொழும்பில் பணம் பெறாதவர்கள் மட்டும் எமது நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சேமிப்பு நிதிப் புத்தகத்தைச் சமர்ப்பித்து மேலுள்ள விலாசத்தில் பணத்தைப் பெற்றுக் கொள்ளவும்:-

196 K நடேசன் 202 N. சஞ்சீவி 203 A. லோகநாதன், 209 S. குலதீபன் 214 K. சுவஸ்திகா, 215 M. மனோகரன், 217 திருமதி K சிவானந்தன், 220 S. பிரகாஷ், 221 செல்வி S. லோகநாதன், 222 S செல்வவினாயகம் 226 S சிவானந்தன் 229 R செந்தில்வதனா. 234 R மதிவதனா, 235 திருமதி p லோகநாதன், 239 K கதிரேசபிள்ளை, 240 S. N. முத்தையா. 241 M ரவீந்திரன், 242 செல்வி பிரசாந்தினி பாலச்சந்திரன், 244 L கலைநாதன், 246-250 நியூசிவாயம்ஸ் 255 G டினேஷ் 262 S ஜெயன் 264 R ஜெயமதி, 265 திருமதி S யோகராஜா 267 P தவலட்சுமி, 280 P. பிரேமஜா, 294 B விகனேஸ்வரி, 295 S லலித்குமார். 296 திருமதி M ஞானப்பிரகாசம் 297 T சந்திரராஜா 404 T ஜெயமதராஜன், 406 K. சுகதர்சிகா, 422 K லோகன், 425 J. சிவசங்கர் 426 N ஜெயவர்த்சனா. 427 திருமதி J. கலாமதி. 428 செல்வி A. கலாநிதி, 437 E. கைலாயபிள்ளை, 438 K யுவநேசன் 456 R. பிரபாகரன், 457 S கனகராஜா 459 ச. துளசி 460 செல்வி C. சடாட்சரம், 461 செல்வி T. சடாட்சரம், 463 R. வீரசிங்கம், 470 K மாலினி 485 N குணரட்ணம், 487 S மாணிக்கவாசகர், 488 M சிவராஜா, 498 K ஸ்ரீஸ்கந்தராஜா மக்மிலன், புத்தகசாலை 499 K ஸ்ரீஸ்கந்தராஜா மக்மிலன் புத்தகசாலை 500K ஸ்ரீஸ்கந்தராஜா மக்மிலன்புத்தகசாலை, 501K ஸ்ரீஸ்கந்தராஜா மக்மிலன்புத்தக சாலை, 502K ஸ்ரீஸ்கந்தராஜா மக்மிலன்புத்தகசாலை, 503 K ஸ்ரீஸ்கந்தராஜாமக்மிலன் புத்தகசாலை, 504K ஸ்ரீஸ்கந்தராஜா மக்மிலன்புத்தகசாலை, 505K ஸ்ரீஸ்கந்தராஜா மக்மிலன் புத்தகசாலை, 506 K ஸ்ரீஸ்கந்தராஜா மக்மிலன் புத்தகசாலை, 507 K ஸ்ரீஸ்கந்தரஜா மக்மிலன் புத்தகசாலை 522 M சுரேஸ். 523 524 P. கோணேஸ்வரன், 533 534 M பேரின்பநாதன். 541 J சிவசங்கர் 542 திருமதி R கலாராணி 555 துரைதியாகேஸ்வரன், 559 S. புஸ்பராஜா, 565 கீதாசினிவினாயகமூர்த்தி, 566 M சுவர்ணா. 567 T A தம்பித்துரை 569 A. சுதர்சினி 570 லக்ஷ்மன் யூட், 571 R ரஞ்சிதமணி, 672 P சிவானந்தராஜா, 573 S நவரட்ணம். 574 B. ஜெயபிரதன், 578 E. சற்குருநாதன். 579 E. அனுசம்மா, 580 K கௌரி, 585 N. ஜெயரஞ்சினி 592 T ராஜசிங்கம், 593 T. ராஜசிங்கம், 596 600 நியூஆனந்தா நகைமாளிகை, 602 M லங்கேஸ்வரன். 605 K லோகநாதன், 606 V. A. சிவராஜா, 612 G. சந்திரிகா, 616 P ரஜன், 632 T பூபாலசிங்கம்,, 637 N பத்மகேஸ்வரன். 638 S ராஜதுரை. 640 N P சம்பந்தபிள்ளை, 648 திருமதி R சிவராஜா, 650 T விவேகானந்தன், 654 S. பாலச்சந்திரன். 655 S லோகநாயகி 656 S கதிர்காமநாதன் 658 பேசுநாயகம், 659 பிள்ளையார், 670 V. ஆனந்தமயில், 679 S தயாபரநாதன், 682 A N தனபாலசிங்கம், 685 S கோபாலகிருஷ்ணன் 687 S. மகேந்திரன், 688 S சிவகணேசன். 689 T. பவானிதேவி. 692 I. பாலசிங்கம், 693 R இராசதுரை, 694 S. விமல்ராஜ் 695 R தவகோபால், 699 S அசோக்குமார் 700 S ஸ்ரீப்பிரியா 709 S. கிறிஸ்தோபர், 713 M S மனோகரன். 715 N தனுஷ்யன். 716 T. நிதர்ஷன் 717 R கங்காதேவி. 718 K அருள்நேசன், 720 K விக்கினேஸ்வரன். 732 R குணரட்ணம், 733 K சஜீருபன், 736 S. சின்னராஸ் 739 K இராமலிங்கம் 746 V மகாலிங்கம்

---

# தேவை

1. மின் அணுவியல் (ELECTRONIC) வல்லுனர்கள் விண்ணப்பிக்கவும். விண்ணப்பதாரி மின் அணுவியற் சாதனங்களை புதிதாக உருவாக்கவும், சரிபார்க்கவும் கூடியவராக இருத்தல் வேண்டும். அனுபவ, தகுதிச் சான்றிதழ்களின் விபரத்தையும் விண்ணப்பத்தில் குறிப்பிடவும்.

2. வீடியோ, ஓடியோ பிரதி செய்தல் மிக்சிங் செய்தல். தணிக்கை செய்தல் ஆகியவற்றில் நீண்டகால அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

01-08 93 இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல. 196
மே/பா. ஈழநாதம்.
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/7078)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு:
06-05-1917

உதிர்வு:
25-06-1993

அமரர்

### கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

(அச்சுவேலி வித்தியாலய இளைப்பாறிய அதிபர்)
தென் புலோலி

அன்பின் திருவுருவாய் பாசத்தின் சிகரமாய் திகழ்ந்து எங்கள் அனைவருக்கும் வழிகாட்டிய அன்புத் தெய்வமே! உங்கள் நினைவுச்சுடர் எங்கள் இதயங்களில் அணையாத் தீபமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

உங்கள் பிரிவால் துயருறும்,
- குடும்பத்தினர்.

இன்று 25-ம் திகதி புற்றளை சித்தி விநாயகராலயத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும், இல்ல கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(5509)

---

நல்லூரில் சுவைதேடும்

## உணவுப் பிரியர்களை ஜெசித்தாரா அழைக்கிறது

ஜோ. எக்கட்டனின் ஜெசித்தாரா தனது சேவையைப் நல்லூரில் விஸ்தரிக்கின்றது.

நல்லைக் கந்தன் எதிரே 24ஆம் திகதி ஆடி 1993ஆம் ஆண்டு முதல்

### சுவைச் சோலையில்

608/2. பருத்தித்துறை வீதி, (நல்லூர் கந்தன் முன்பாக) தனது ஏகோபித்த வாடிக்கையாளர்களின் நலன்கருதி சேவையை தொடர்கிறது.

நீங்களும் முன்கூட்டியே பதிவு செய்து ஏமாற்றத்தை தவிர்க்கவும்.

மரக்கறி / விரதச்சாப்பாடு
பார்சல் ரூபா 25/- மட்டுமே

பகல் 12. 00 முதல் பெற்றுக்கொள்ளலாம்.

ஜோ. எக்கட்டனின் ஜெசித்தாரா
சுண்டிக்குளி மகளிர் முன் ஒழுங்கை, சுண்டிக்குளி.

ஜெசித்தாரா புது யுகத்தில் புது உருவம்

(சி/7062)

---

## 31-ம்நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
08. 05. 1948



மறைவு:
25. 06. 1993

அமரர்

### கனகசபைசச்சிதானந்தன்

(மணியம்) 6ஆம் வட்டாரம், நயினாதீவு

எங்கள் ஒளி விளக்கே! எம் பாசத் தீபமே! எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இவ்வுலகை நீத்து ஓர் திங்கள் ஆகுதையா! குடும்பத்தின் உற்ற துணையானவரே! திடீர் என எம்மைவிட்டு பிரிந்தீரே!

உங்கள் ஆத்மா சாந்திபெற அம்பிகையை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி. மக்கள், மாமா, மாமி, மைத்துனர், மைத்துனிமார். மகேந்திரன், சிவசுப்பிரமணியம், வே. பொன்னம்பலம் லீலாவதி.
97/11 A V. றோட்,
அரியாலை.

(5522)

... 522 M சுரேஸ். 523 524 P. கோணேஸ்வரன், 533 534 M பேரின்பநாதன். 541 J சிவசங்கர் 542 திருமதி R கலாராணி 555 துரைதியாகேஸ்வரன், 559 S புஸ்பராஜா, 565 கீதாசினிவினாயகமூர்த்தி, 566 M சுவர்ணா, 567 T A தம்பித்துரை 569 A. சுதர்சினி 570 லக்ஷ்மன் யூட், 571 R ரஞ்சிதமணி, 672 P சிவானந்தராஜா, 573 S நவரட்ணம். 574 B. ஜெயபபிரதன், 578 E. சற்குருநாதன். 579 E. அனுசம்மா, 580 K கௌரி, 585 N. ஜெயரஞ்சினி 592 T ராஜசிங்கம், 593 T. ராஜசிங்கம், 596 600 நியூஆனந்தா நகைமாளிகை, 602 M லங்கேஸ்வரன். 605 K லோகநாதன், 606 V. A. சிவராஜா, 612 G. சந்திரிகா, 616 P ரஜன், 632 T பூபாலசிங்கம்,. 637 N பத்மகேஸ்வரன், 638 S ராஜதுரை, 640 N P சம்பந்தபிள்ளை, 648 திருமதி R சிவராஜா, 650 T விவேகானந்தன், 654 S. பாலச்சந்திரன். 655 S லோகநாயகி 656 S கதிர்காமநாதன் 658 பேசுநாயகம், 659 பிள்ளையார், 670 V. ஆனந்தமயில், 679 S தயாபரநாதன், 682 A N தனபாலசிங்கம், 685 S கோபாலகிருஷ்ணன் 687 S. மகேந்திரன், 688 S சிவகணேசன். 689 T. பவானிதேவி. 692 I. பாலசிங்கம், 693 R இராசதுரை, 694 S. விமல்ராஜ் 695 R தவகோபால், 699 S அசோக்குமார் 700 S ஸ்ரீப்பிரியா 709 S. கிறிஸ்தோபர், 713 M S மனோகரன். 715 N சனுஷ்யன். 716 T. நிதர்ஷன் 717 R கங்காதேவி. 718 K அருள்நேசன், 720 K விக்கினேஸ்வரன். 732 R குணரட்ணம், 733 K சஜருபன், 736 S. சின்னராஸ் 739 K இராமலிங்கம், 746 V மகாலிங்கம், 748 V. குமாரசாமி. 749 R சிவகாமி. 754 S தயாபரநாதன் 755 K. ரவிஞ்சன், 759 V. சோமசுந்தரம், 762 S வசந்தகுமார். 763 B தயாளினி 764 N ராஜரட்ணம், 765 S ஞானசௌந்தரி, 770 R. இரத்தினசேதிராஜா. 776 S ரவீந்திரன். 777 P. சுரேஸ்குமார், 778 B விமலாதேவி, 781 K நடேசன், 789 V. ஜெயலலிதா 790 V. விமலாதேவி, 791 V. வசந்தமலர், 792 A. இராசன், 793 T. தவசோதி, 794—798 V. பழனியாண்டி (பன்னீர்), 843 J. முத்தையா

பணம் வழங்குதல் பற்றிய விபரம் மேற்படி கடையில் அறிவிக்கப்படும்

08-07-93 வரை கொழும்பில் பணம் பெற்றுக்கொண்டவர்களின் விபரம் வருமாறு:-

464 T சிவசுந்தரராசா, 469 734. 725 செல்வி துரைரட்ணம், 179 S சிவராஜா, 238 K புண்ணியவதி. 517 I கந்தசாமி 405, 408 V ராஜரட்ணம் 766 குபேரகுலசிங்கம், 259 R துஷ்யந்தி, 207 R கிருஷ்ணரூபிணி, 195 R உதயசங்கர், 194 K ரவீந்திரா, 227 K. துரைசிங்கம், 554 V. தனஞ்சயன். 545 V. கௌதமன். 539 R அம்பிகை பாலன், 225 Y குணசிங்கம், 200 N. சாந்தசெரூபன். 446 T. செல்வரட்ணம், 210 S பத்மநாதன், 162 திருமதி T மீரா, 163 S தேவரஞ்சன், 465 K ஞானகுமார், 722 K பாலச்சந்திரன், 594 G கஜபதி. 582 G இமயவன். 441 K கணேசமூர்த்தி 109 B கணேசமூர்த்தி. 49K விஸ்வநாதன். 549 A முருகேசு, 550 T கமலாவதி, 112 R நாகபூஷணி, 111 R ஜெயரூபன், 115 N ராஜரட்ணம், 126 R. நிஷாந்தி, 128 R. ரஜீவன, 129 R ஜெசிந்தா, 458 V. செல்வதாசன், 199 K. J ரூபேந்திரன். 138 N. கோகுலவதனி, 479 N. யோகேஸ்வரி 481 நவரட்ணராஜா. 771 K. இந்துமதி, 601 N பாலச்சந்திரசர்மா. 206 P. தாரணி, 205 K பரமகுருநாதன் 652 T. புண்ணியமூர்த்தி. 635 S சுகுமார், 636 T. யோகரட்ணம் 419 A. ரெஷான் 610 திருமதி P ஸ்ரீஸ்கந்தராஜா. 611 திருமதி V. குமாரசாமி 293 K விஜயகுமார், 218 ஜெகநாதன் கோபி, 219 J. அனுராஜ் 292 மேரி மார்கிரட், 245 மேரிஸ்டெல்லா ஜூஜினா, 683 M ஜெயசீலன் வயலட். 141 V. பரமசிவம், 231 A. திசைவீரசிங்கம், 232 T குந்தவி. 696 V. நவநீதன், 834—838 சோபிகா ஜுவலரி. 847 R குமரேஷ் 33 J ஆரோக்கிய நாதன். 224 திருமதி J R ஹென்ஸ்மன் 462 V கதிர்காமநாதன் 544 K. பிரசாந்தி, 546 K சிவசாந்தி. 684 K கௌரி 482, 484 V வன்னியசிங்கம், 643—647 நியூலக்கிஸ்டார் நகைமாளிகை, 708 K. இந்துராணி 449 T கண்ணன், 515 துர்கா ரெகஸ் 519 மாணிக்கசிங்கம், 561 M. துரைராஜா, 562 V உமா, 581 S சுரேஷ், 653 T. பாஸ்கரன், 97 S பரமேஸ்வரி 99 K. சிறீகாந்தன். 64 S. சதாசிவம், 442—443 S J. யோகதாஸ். 444 S E மரியதாஸ் 418 P சிவகௌரி, 529 K ஜெயகுமார், 530 K உதயகுமார், 608 I. மேகலை. 257-258 A பேரின்பராஜா. 281-290 S ஞானசேகரம், 159 R. சத்தியசீலன் 467 S. சத்தியர். 583 S. விநோதன், 11 M இராசலிங்கம்; 77, 113. 131 140, 149 M. யோகேஸ்வரன். 508 510 K சிவபாஸ்கரன், 192 S குணரட்ணம். 557 A. உஷா, 558 Y. ஆன்ஜேஜினி, 757 A. மேரி, 769 டளீஸ்செல்வி, 780 R. அமலநாயகி.

முக்கியகுறிப்பு:- எம்மால் வழங்கப்பட்ட சேமிப்புநிதி வைப்புப் புத்தகங்கள் இன்றி ஒருவருக்கும் பணம் மீளளிக்கப்படமாட்டாது.

மேலதிக தொடர்புகளுக்கு:

**K. B. பரமநாதன்**

16, 6ஆவது ஒழுங்கை,
சென்ற் பெனடிக்ற் மாவத்தை,
கொழும்பு - 13
தொலைபேசி எண் - 827448

(5514)

... திருவுருவாய் பாசத்தின் சிகரமாய் திகழ்ந்து எங்கள் அனைவருக்கும் வழிகாட்டிய அன்புத் தெய்வமே! உங்கள் நினைவுச்சுடர் எங்கள் இதயங்களில் அணையாத் தீபமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

உங்கள் பிரிவால் துயருறும்,
– குடும்பத்தினர்.

இன்று 25-ம் திகதி புற்றளை சித்தி விநாயகராலயத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும், இல்ல கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(5509)

## கனகசபைசச்சிதானந்தன்

(மணியம்) 6ஆம் வட்டாரம், நயினாதீவு

எங்கள் ஒளி விளக்கே! எம் பாசத் தீபமே! எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இவ்வுலகை நீத்து ஓர் திங்கள் ஆகுதையா! குடும்பத்தின் உற்ற துணையானவரே! திடீர் என எம்மைவிட்டு பிரிந்தீரே!

உங்கள் ஆத்மா சாந்திபெற அம்பிகையை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி. மக்கள், மாமா, மாமி, மைத்துனர்,
மைத்துனிமார். மகேந்திரன், சிவசுப்பிரமணியம்,
வே. பொன்னம்பலம் லீலாவதி.
97/11 A V. றோட்,
அரியாலை.

(5522)

## நினைவு கூருகின்றோம்... 1993-07-25

1983ஆம் ஆண்டு இதேதினத்தில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிறை அதிகாரிகளின் உதவியுடன் சிங்களக்காடையர்களினால் படுகொலை செய்யப்பட்ட,

**புறோக்கா** (சின்னப்பு சத்தியேஸ்வரன்-அச்சுவேலி தெற்கு-யாழ்)

**புத்தூர் மாமா** (தாமு சந்தையா-புத்தூர் கிழக்கு-யாழ்)

* **இராசகிளி** (கிருஷ்ணபிள்ளை நாகராசா-கட்டைபறிச்சான். மூதூர்-திருமலை)

❋ **தங்கத்துரை** (நடராசா தங்கவேல்-தொண்டமானாறு)

❋ **குட்டிமணி** (செல்வராசா யோகச்சந்திரன்-வல்வெட்டித்துறை)

❋ **ஜெகன்** (கணேசானந்தன்ஜெகநாதன்-கணேசபவனம்-தொண்டமானாறு)

❋ **சென்றறர்/நடேசதாசன்** (வைத்திலிங்கம் நடேசதாசன் சிவன்கோயிலடி-வல்வெட்டித்துறை)

❋ **தேவன் வெள்ளை மாமா** (செல்லத்துரை சிவசுப்பிரமணியம்-வளலாய்-அச்சுவேலி-யாழ்)

❋ **சிவபாதம் மாஸ்ரர்** (நவரத்தினம் சிவபாதம்-பத்தமேனி, அச்சுவேலி-யாழ்)

இதே சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் பல தமிழர்கள்.

கிளிநொச்சி-பரந்தன் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட கண்டாவளையைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட பருத்தித்துறை- புலோலீ தெற்கு, சாளம்பையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

கொழும்பு-நாரகன்பிட்டியில் சிங்களக்காடையர்களினால் அலவாங்கினால் அடித்துக்கொல்லப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1986ஆம் ஆண்டு திருமலை-மூதூர் ஆலிம்சேனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

★ **நசீம்/கஜன்** (அப்துல் மானாப் முகமது நசீம்-மூதூர்-திருமலை)

மன்னாரில் சுவரொட்டி ஒட்டும்போது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

★ **அசோக்** (பெருமாள் யோகநாதன்-சாவற்காடு-மன்னார்)

1987ஆம் ஆண்டு யாழ்-கோட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**யோகன்** (ஐயாத்துரை யோகேந்திரன்-புன்னாலைக்கட்டுவன்-யாழ்)

1989ஆம் ஆண்டு வடமராட்சியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 பெண்கள் உட்பட 5 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய.

**யசோ** (— ராஜ்குமார் — வல்வெட்டித்துறை)

கறுகலேரியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

**அரி** (அழகையா சிதம்பரம்-அலம்பில்-மணலாறு)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட ஆறுமுகத்தான் குடியிருப்பைச் சேர்ந்த 04 தமிழர்கள்.

நெல்லியடியில் இடம்பெயர்ந்தோர் தங்கியிருந்த அரிசி ஆலை ஒன்றின் மீது சிறிலங்கா விமானப்படையினர் விமானக்குண்டுவீச்சில் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்,

1991ஆம் ஆண்டு ஆ.க.வெ. நடவடிக்கையின்போது விழுப்புண் அடைந்திருந்து யாழ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும்போது வீரச்சாவெய்திய,

**தேவா** (சின்னத்துரை சந்திரமோகன் - வாகரை-மட்டு)

ஆ.க.வெ. நடவடிக்கையின்போது ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**நிமல்** (தனிநாயகம் சதீஸ்குமார் -எழுவைதீவு 03-யாழ்)

**அகிலன்** (வேலுப்பிள்ளை கந்தசாமி-கோயில்புளியங்குளம், நெடுங்கேணி-மணலாறு)

**கிறிஸ்ரி** (வேலுப்பிள்ளை வேதநாயகம்-குருந்தலடி சுழிபுரம் மேற்கு-யாழ்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது படுகொலை செய்யப்பட்ட விவசாயியான வேப்பவெட்டுவானைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1992ஆம் ஆண்டு மட்டு-பழுகாமம் பகுதியில் 24-07-1992 அன்று சிறிலங்கா இராணுவ முகாம் காவலரண் தகர்ப்பின்போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய.

**2ம் லெப். சண்முகப்பிரியன்/அச்சுதன்** (மாணிக்கம் நித்தியானந்தன்-மல்வத்தை-அம்பாறை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

❋ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் எமது அமைப்பைச்சாராமல் தாயக விடுதலைக்காகப் போராடியவர்கள்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-7074)

சிந்தனைக்கு

கனியில் சிறந்ததை விரும்புபவன்
கட்டாயம் மரமேறித்தான் ஆக வேண்டும்.
- ஆதி அமெரிக்கர் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 25-07-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

# இராணுவத்தின் முகத்தில் ஜனாதிபதி பூசிய கரி

சிறிலங்கா இராணுவத்தின் முகத்தில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவைப் போல் சிங்கள அரசியல்வாதிகள் எவரும் இதுவரை கரிபூசியதில்லை. மட்டக்களப்பில் நேற்று முன்தினம் ஆரம்பமாகிய ஜனாதிபதி நடமாடும் இடம் பெயர் சேவையில் கலந்து கொள்வதாக இருந்த ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா இறுதி நேரத்தில் தனது விஜயத்தை ரத்துச் செய்ததன் மூலமே இராணுவத்தை அவமரியாதை செய்தார்.

இந்நடவடிக்கையின் மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட, அதி உயர்ந்த பதவி வகிக்கும் ஜனாதிபதியையே நாட்டின் முப்படைகளினாலும் பாதுகாக்க முடியாத நிலை உள்ளது என்பதை வெளிக்காட்டியுள்ளார். இந் நடவடிக்கையானது முப்படைகளுக்கும், அதன் அதிகாரிகளுக்கும் பெருத்த அவமானத்தைத் தேடிக் கொடுத்துள்ளதோடு ஆயுதப்படையினர் மீது அரசியல்வாதிகள் கொண்டுள்ள அவநம்பிக்கையைக் காட்டுவதாகவும் அமைந்தது.

சுமார் ஒரு மாத காலத்திற்கு முன்னர் இன்னும் நான்கு மாதத்தில் கிழக்குமாகாணத்தில் கருத்துக்கணிப்பொன்று நடத்தும் சூழ்நிலையை தம்மால் உருவாக்க முடியும் என இராணுவம் மார்பு தட்டும் வேளையில் மட்டக்களப்பு நகரில் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியில் பாதுகாப்பு காரணங்களுக்காக பங்குபற்ற முடியவில்லை என ஜனாதிபதி அறிவிப்பது இராணுவத்தரப்பு கூற்றின் மீது அரசுத் தலைவர் கொண்டுள்ள நம்பிக்கையீனத்தைக் காட்டுவதாகவே உள்ளது.

அத்தோடு, இந்நடவடிக்கையானது இராணுவத்தின் மீதான அவநம்பிக்கையை மட்டுமல்ல அரசாங்கத்தையும், இராணுவத்தையும் பெரும் பொய்யர்கள் ஆக்கியும் உள்ளது. இதுவரை கிழக்கு மாகாணம் தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டதாக அரசும், இராணுவமும் செய்து வந்த பிரசாரமும் வலுவிழந்து போய் விட்டது.

ஜனாதிபதி இடம்பெயர் சேவையில் டி. பி. விஜயதுங்கா பங்குபற்றுவதாக தகவல்கள் வெளிவந்த பின்னர் முப்படையினரும் இணைந்து பாரிய அளவில் நடவடிக்கையை மேற்கொண்டனர். சந்...

# வடக்கு கிழக்கை மீட்க இனத்திற்கு இடமளியுங்கள்

## தேரோவின் கோரிக்கை

(கொழும்பு)

வடக்குக், கிழக்கு பகுதிகள் விடுதலைப் புலிகளிடமிருந்து முழுமையாக மீட்கப்பட வேண்டும் அதனை மறைக்க வேண்டாம். அதனைச்சாதிக்க அரசாங்கத்தால் முடியாது என்றால் அப்பணியில் இனத்திற்கு இடம் கொடுக்க வேண்டும். இவ்வாறு ருகுணு பல்கலைக்கழக உபவேந்தரான பேராசிரியர் பரவாகார பஞ்நானந்த தேரோ தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், கட்சி அரசியலிலிருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும். எந்த நாளும் அழுவதை நிறுத்துவதற்கு புலிகளை ஒடுக்கும் பணியை இனத்திடம் தர வேண்டும். இதன் மூலம் எமது நாட்டை பாதுகாக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய டாக்டர் குணதாச அமரசேகர தமது உரையில் வடக்கும், கிழக்கும் இணைக்கப்படுவதை மக்கள் கடுமையாக எதிர்க்க வேண்டும். இதற்கான போராட்டங்கள் நடத்துவதற்கு தயக்கம்கொள்ளக் கூடாது. கிழக்கை இணைப்பதற்கான சர்வசன வாக்கெடுப்பை நடத்தாமலேயே அரசாங்கம் வடக்கு, கிழக்கு இணைப்பை கைவிட வேண்டும். மாகாண சபைத் திட்டம் மூலம் நாட்டின் செல்வம் வீண் விரயம் செய்யப்படுகிறது. எதிர்காலத்தில் மாகாண சபைகள் மூலம் நாடு பிளவுபடும் ஆபத்தும் உள்ளது. நாளை ஈழம் உருவாக மலையகமும் உள்ளடக்கப்படலாம். எனவே சிங்கள மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

சிங்கள சட்டத்தரணிகள்சங்கத்தின் சார்பில் பேசிய சட்டத்தரணி எச். எல். குணசேகர தமதுரையில் தமிழர்களை எமக்கு எதிரிகளாக மாற்றியது சிங்கள இனவாதிகளே. நாட்டையும், இனத்தையும் காட்டிக் கொடுத்து ஆட்சியை அமைத்துக் கொண்டவர்கள் இவர்களே. இவர்கள் ஒருபோதும் அரசியல் தீர்வை முன்வைக்கப்போவது இல்லை. இதற்கு ஒரேவழி யுத்தம் மட்டுமே. தொண்டமானே இன்று மலையகத்தை ஆளுகின்றார். மலையகத்தில் சிங்களவர்கள் புறக்கணிக்கப் படுகின்றனர். வடக்கு, கிழக்கிலும் சிங்களவர் வாழ முடியாத நிலையே இன்றுள்ளது என்று தெரிவித்தார்.

இங்கு உரை நிகழ்த்திய கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் நளின் த சில்வா தமது உரையில் இன்று இப்பிரச்சினையின் பின்னணியில் உலக வல்லரசுகளும், மற்றும் நிதி நிறுவனங்களும் இருக்கின்றன. உலக வங்கியும், அரச சார்பற்ற அமைப்புகளும் கூட பின்னணியில் செயற்படுகின்றன. வடக்கேசென்ற பொலிஸாரின் உறவினர்கள் அங்கேயே அகப்பட்டிருக்க யார் காரணம்? அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும். தேசிய அரசு அமைக்கப்படுவதை நாம் எதிர்க்கின்றோம். மேல் மாகாண முதல்வர் சந்திரிகா இன்று அதிகாரம் கேட்கின்றார். இவருக்கு வழங்கப்படும் அதே அதிகாரங்கள் வடக்கு, கிழக்கிற்கும் கிடைக்கும். அப்படியானால் அது தனிநாடு என்ற நிலைக்குச் சமனாக ஆகிவிடும் என்றும் தெரிவித்தார். அத்துடன் கொழும்பை மையமாகக் கொண்டு செயற்படாது எல்லைக் கிராம மக்கள் படும் வேதனையை நேரில் சென்று பார்க்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## மேலும் ஐவர் கைதாம்

சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பன் குழுவினரைச் சேர்ந்த மேலும்ஐந்து பேர் கர்நாடக மாநில சிறப்பு அதிரடிப் பொலிஸ் படையினரால் கைது செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# மாவீரர் உருவப்படங்கள் மேலும் வெளிவந்துள்ளன

ஆ. க. வெ நடவடிக்கையின்போது தற்கொடையாளர்களான பின்வரும் மாவீரர்கள் உருவப்படங்கள் அண்மையில் வெளிவந்துள்ளன.

01. வீ. வே. பதுமதி — சுதாஜினி சிறிதரன் மயிலிட்டி.
02. வீ. வே. சுஜே/சஜி — பானுமதி பெருமாள் காங்கேசன்துறை.
03. 2-ம்லெப். மதனா — சிவமலர் தளையசிங்கம் சாவகச்சேரி.
04. வீ. வே. அமலன் — தம்பிராசா சிவகணேஸ் திருமலை.
05. 2-ம்லெப். அமலதாஸ் — நடராசா சிறிதரன் திருமலை.
06. வீ. வே. கார்த்திகா — மேரிகலிஸ்ரா சூசைப்பிள்ளை நாவாந்துறை.
07. வீ. வே. அகிலன் — வேலுப்பிள்ளை கந்தசாமி மணலாறு.
08. லெப். விஜயன் — வேலுப்பிள்ளை மாரிமுத்து கொட்டடி.
09. வீ. வே. தவமலர் — மஞ்சுளாதேவி ஈஸ்வரபாதம் தாளையடி.
10. கப்டன் ஈழவன் — குமாரசாமி ரமேஸ்குமார் வண்ணார்பண்ணை.
11. வீ. வே. வரதன் — மாசிலாமணி மகேந்திரன் மட்டக்களப்பு.
12. லெப். கேசிகன் — பரஞ்சோதிநாதன் நியூட்டன் பிரான்சிஸ். பண்டத்தரிப்பு.
13. வீ. வே. சிவானி — ரோகினி சண்முகநாதன் கொக்குவில்.
14. 2-ம்லெப். அசாவேதிரி — ஜானகி கனகரத்தினம் வவுனியா.
15. லெப். யோகா — யசோதாதேவி கறுப்பையா திருமலை.
16. வீ. வே. சரன் — வேலாயுதம் சிவனையா திருமலை.
17. வீ. வே. ஜமுனா — சீதாலட்சுமி தியாகராசா வவுனியா.
18. லெப். கலைச்செல்வன் — துரைசிங்கம் ரமேஸ் முல்லைத்தீவு.
19. வீ. வே. கிர்மானி — யோன் எட்வேட் கெனடி குருநகர், யாழ்.
20. வீ. வே. அருள் — சத்தியபாமா கிருஷ்ணதேவன் மானிப்பாய்.
21. லெப். சியால்/சியாஸ் — கிங்ஸ்லி யோசப் இராசரத்தினம் யாழ்ப்பாணம்.
22. 2-ம்லெப். அசோகா — இந்திரகுமாரி சிவகுரு பருத்தித்துறை.
23. வீ. வே. சகுந்தலா. — மேரிஎமல்டா வில்லியம் மரியதாஸ் பண்டத்தரிப்பு.
24. 2-ம்லெப். யசோ — பஞ்சலிங்கம் ராஜ்குமார் வல்வெட்டித்துறை.

1991ஆம் ஆண்டின் ஆ. க. வெ. நடவடிக்கையின்போது ஆனையிறவுப் பிரதேசத்தில் தம்மைத் தற்கொடையாளர்களாக்கிக் கொண்ட மேல்வரும் மாவீரர்களின் போஸ்ரர் படங்களை சிறு அன்பளிப்புச் செலுத்துவதன் மூலமாக தமிழீழ மாவீரர் பணிமனை, கொக்குவிலில் பெற்றுக்கொள்ளலாம் என்று தமிழீழ மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது.

# வீதி விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வீதியையும் சங்கிலியன் வீதியையும் இணைக்கும் புதியவீதி, யாழ். மாநகர சபையால் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

போக்கு வரத்தை இலகுவாக்கும் நோக்குடனேயே இது விஸ்தரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

## மாநகரசபைக்கு ஜெனரேற்றர்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபைக்கு புதிதாக ஒரு ஜெனரேற்றர் எடுத்துவரப்பட்டது.

கடந்தவியாழனன்று பருத்தித்துறை துறைமுகத்திற்குவந்து சேர்ந்த குமண கப்பலில் இது எடுத்துவரப்பட்டது.

இத்தோடு தொற்று நீக்கி மருந்து, குளோரின் போன்ற பொருள்களும் மாநகரசபைக்கு ...

# 837 தமிழ்க் கைதிகள் மீது வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

களுத்துறை, மகஸீன்சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 837 தமிழ்க் கைதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய ஜயலத் கமிஷன் நடவடிக்கை எடுத்துள்ளது.

பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க்கைதிகளில் 29 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு பொலிஸ் அறிக்கை பெற முடியாமல் இருப்பதால் இவர்களுக்கெதிராக வழக்கு தாக்கல் செய்யமுடியாமல் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தென்னிலங்கை சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் கொழும்பில் கைதான வடக்கு கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என லங்காதீப பத்திரிகை தெரிவித்துள்ளது.

# விமான ஓடு பாதை அமைக்கப்படமாட்டாது

(கொழும்பு)

நீர்கொழும்பு இரணவில பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ள வொய்ஸ் ஒப் அமெரிக்கா வானொலி நிலையம் அருகே விமான ஓடுபாதை ஒன்றும் அமைக்கப்படவுள்ள ... சரவைப் பேச்சாளர் ஹரல்ட் ஹேரத் நேற்று தெரிவித்தார்.

இந்த அமெரிக்க வானொலி நிலையத்தில் ஏழு வெளிநாட்டவரே பணிபுரிவர் என்றும் அவர் தெரிவித்தார். 60 மில்லியன் அமெரிக்க ...

# இடமாற்ற வேலைத்திட்டம் தயாரிக்கப் பணிப்பு

ஆசிரியர் இடமாற்றம் பெற்றுச்செல்ல முன்னர் அவருடைய இடத்துக்கு பொருத்தமான ஆசிரியர் பதில் கடமையை பொறுப்பேற்ற பின்னரே இடமாற்றத்தில் செல்வதற்குரிய வாய்ப்பை வழங்கக்கூடிய வகையிலும், நீண்டகாலமாக கடமையின் நிமித்தம் பிரிந்துவாழும் துணைவர் துணைவியர் இணைந்து சேவை ...

அத்தோடு, இந்நடவடிக்கையானது இராணுவத்தின் மீதான அவநம்பிக்கையை மட்டுமல்ல அரசாங்கத்தையும், இராணுவத்தையும் பெரும் பொய்யர்கள் ஆக்கியும் உள்ளது. இதுவரை கிழக்கு மாகாணம் தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டதாக அரசும், இராணுவமும் செய்து வந்த பிரசாரமும் வலுவிழந்து போய் விட்டது.

ஜனாதிபதி இடம் பெயர் சேவையில் டி. பி. விஜயதுங்கா பங்குபற்றுவதாக தகவல்கள் வெளிவந்த பின்னர் முப்படையினரும் இணைந்து பாரிய அளவில் நடவடிக்கையை மேற்கொண்டனர். சந்தேகத்திற்கு இடமானோர் நூற்றுக்கணக்கில்கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரமாக்கப்பட்டன. 4000 துருப்புக்கள் மேலதிகமாக அனுப்பப்பட்டு தேடுதல்கள் தீவிரமாக்கப்பட்டன. பொலிஸாரும் குவிக்கப்பட்டனர். முப்படையினரும் இணைந்து வான் - கடல் - தரை ஆகிய யாவற்றிலும் ரோந்து நடவடிக்கைகளைப் பலப்படுத்தினர்.

ஆனால் இவை யாவும் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவிற்கு நம்பிக்கையைக் கொடுக்கவில்லை, இதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. பலத்த பாதுகாப்பின் மத்தியிலும் பல அரசியல் தலைவர்களும், பாதுகாப்புப் படை தளபதிகளும் கொல்லப்பட்டுள்ளனர். இவற்றை முப்படைகளினாலோ, சிறிலங்கா புலனாய்வுப் பகுதியினாலோ தடுத்து நிறுத்திவிட முடியவில்லை. இந்நிலையில் ஜனாதிபதி தனது பாதுகாப்பு குறித்து ஐயப்பட்டதில் தவறு எதுவுமில்லை.

அதாவது இலங்கையில் கடந்த காலத்தில் இடம்பெற்ற பல சம்பவங்கள், ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா போன்றவர்களின் பாதுகாப்பு என்பது சாத்தியமற்றதொன்றென ஜனாதிபதியின் ஆலோசகர்கள் கருதுவது நியாயமானதே. ஏனெனில் தனக்கென தனியானதொரு பலத்த பாதுகாப்பு ஏற்பாட்டைச் செய்திருந்த முன்னாள் ஜனாதிபதியே குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட நிலையில், பதவி ஏற்ற பின்னர், பாதுகாப்பு ஏற்பாடுகளில் பல மாறுதல்களைச் செய்த டி. பி. விஜயதுங்கா, பாதுகாப்பு அதிகாரிகளின் வார்த்தைகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளாததில் தவறில்லை.

இந்நிலையில் அதாவது பாதுகாப்பு அதிகாரிகளின் திறமையில் ஜனாதிபதி நம்பிக்கை கொள்ளாத நிலையில், ஜனநாயக ரீதியில் அதற்குப் பொறுப்பான தளபதிகள், அதிகாரிகள் பதவி விலகுவதே நியாயமானதாகும். ஆனால், இது தனியாக பாதுகாப்புப் படை அதிகாரிகளின் திறமையில் மட்டும் தங்கியிருக்கவில்லை. எதிர்த்தரப்பின் புத்திக் கூர்மையிலும் தந்திரத்திலும், பலத்திலும் தங்கியுள்ளது. இந்நிலையில் தமிழர் தாயகத்தில் சிங்களத் தலைவர்கள் மட்டுமல்ல. ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்ட எவரும் நிம்மதியாக உலாவர முடியாது. இதற்கு சிங்கள பாதுகாப்பு படையினாலும் சரி. புலனாய்வுத்துறையினாலும் சரி பாதுகாப்பு வழங்கிவிட முடியாது.

ஜெனரேற்றர்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபைக்கு புதிதாக ஒரு ஜெனரேற்றர் எடுத்துவரப்பட்டது.

கடந்தவியாழனன்று பருத்தித்துறை துறைமுகத்திற்குவந்து சேர்ந்த குமண கப்பலில் இது எடுத்துவரப்பட்டது.

இத்தோடு தொற்று நீக்கி மருந்து, குளோரின் போன்ற பொருள்களும் மாநகரசபைக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

(தி) (பா)

பொலிஸ் அறிக்கை பெற ...

## விமான ஒடு பாதை அமைக்கப்படமாட்டாது

(கொழும்பு)

நீர்கொழும்பு இரணவில பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ள வொய்ஸ் ஒப் அமெரிக்கா வானொலி நிலையம் அருகே விமான ஓடு பாதை ஒன்றும் அமைக்கப்படவுள்ளதாக வெளியான செய்தியில் உண்மையில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் ஹரல்ட் ஹேரத் நேற்று தெரிவித்தார்.

இந்த அமெரிக்க வானொலி நிலையத்தில் ஏழு வெளிநாட்டவரே பணிபுரிவரென்றும் அவர் தெரிவித்தார். 60 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இந்த வானொலி நிலையம் அமைக்கப்படவுள்ளது.

...ரிகை தெரிவித்துள்ளது.

## 4000 பதில் அதிபர்களை நிரந்தரமாக்க முடிவு

(கொழும்பு)

இலங்கை முழுவதிலுமுள்ள சுமார் 4,000 பதில் அதிபர்கள் இம் மாத இறுதிக்குள் நிரந்தரமாக்கப்படவுள்ளார்கள்.

1993 ஜூன் முதலாம் திகதிக்கு முன் உள்ள ஒரு வருடகாலப்பகுதியில்தொடர்ச்சியாக ஒரு வருடத்துக்கும் குறையாமல் அதிபர்களாகப் பதில் கடமை புரிபவர்களும், தற்காலிக அதிபர்களும் நிரந்தரமாக நியமனம் பெறவுள்ளார்கள் எனக் கல்விச்சேவைச் சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கான விண்ணப்பங்களைக் கல்விச்சேவைச் சபை கடந்தமாதம் கோரியிருந்தது

## ஐந்து கொலைகளை புரிந்த இராணுவ சிப்பாய் கைது

### ஆறாவது மனைவியும் உடன் கைது

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடி ஐந்து கொலைகளை புரிந்து விட்டு தலைமறைவாகியிருந்த சிப்பாய் ஒருவர் தனது மனைவியுடன் குகையொன்றில் ஒழித்திருந்தபோது ஹொறணைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

மேற்படி சிப்பாயுடன் குகையில் ஒளித்து வாழ்ந்த பெண் இவரது ஆறாவது மனைவி என்றும் கூறப்படுகிறது. பொலிசாருக்குகிடைத்த இரகசியத் தகவல் ஒன்றையடுத்து ஹொறணை ரும்புக என்ற பகுதியில் காட்டுப் பிரதேசத்தில் குகையொன்றை முற்றுகையிட்ட பொலிசார் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த இவரையும் இவரது மனைவியையும் கைது செய்தனர்.

ஹிக்கடுவ, களுத்துறை, கேகாலை, பொலநறுவை பாணந்துறை ஆகிய பகுதிகளில் வெவ்வேறு பெயர்களில் ஐந்து பெண்களை ஏமாற்றி விவாகம் செய்த இவர் பின்னர் வடபகுதியுத்தத்திற்கு செல்கிறேன் எனக் கூறி மனைவிமாரின் நகை, பணம் என்பவற்றை பெற்றுக் கொண்டு தலைமறைவாகி வந்தாராம். நீண்டகாலமாகவே இவர் பொலிசாரால் தேடப்பட்டு வந்ததாக கூறப்படுகிறது.

## லஞ்சம்வாங்கிய பரிசோதகர் அதிகாரிகளால் கைது

(கொழும்பு)

மோட்டார் வாகனப் பரிசோதகர் ஒருவர் லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக லஞ்சத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

வெலிமடையில் சிறிலங்கா போக்குவரத்துச்சபை பயிற்சி நிலையத்தைச்சேர்ந்த ஒன்பது பயிலுனர் சாரதிகளுக்குசாரதி அனுமதிப்பத்திரம் வழங்க 4500 ரூபா லஞ்சம் வாங்கி, இவர் கூடிய புள்ளிகள் வழங்கியதாக பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பண்டாரவளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட மோட்டார் வாகனப்பரிசோதகரை விளக்க மறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## நினைவுக் கூட்டம்

புத்தூர் கிழக்கு மாவீரர் நினைவாக விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடாத்தும் நினைவுக் கூட்டம் இன்று இரவு 8 00மணிக்கு கழகவிளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இந் நிகழ்வில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## நூல்கள் அன்பளிப்பு

சங்கானை மாளியவத்தையைச் சேர்ந்த திருமதி கனகம்மா செல்லத்துரை என்பவர் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் தமது மகளான திருமதி பத்மதேவி விமலதாசனின் சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான 322 நூல்களை சங்கானை பொது நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

“புளொட்”டின்

இதேவேளை புளொட் குழுவினர் வவுனியா பகுதியில் வீடுகளைச் சோதனையிடுவதாகவும், வவுனியா நகரை அண்டிய பகுதிகளிலிருந்து பலர் புளொட் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ஏற்கனவே புகார் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா நகரில் தங்கியிருப்பதற்காக பொலிசாரால்வழங்கப்படும் பத்திரங்களை புளொட்'குழுவினர் சோதனையிடுவதாகக்கூறி தகாத நடத்தையில் ஈடுபட்டு வருவதாகவும் தமிழர் வீடுகளில் மட்டுமன்றி இராணுவத்தினரின் வீடுகளிலும், சிங்களவர்களின் வீடுகளிலும் நுழைந்து தேடுதல் நடாத்துவதாகவும் 'திவயின' பத்திரிகை தெரிவிக்கிறது.

## இடமாற்ற வேலைத்திட்டம் தயாரிக்கப் பணிப்பு

ஆசிரியர் இடமாற்றம் பெற்றுச்செல்ல முன்னர் அவருடைய இடத்துக்கு பொருத்தமான ஆசிரியர் பதில் கடமையை பொறுப்பேற்ற பின்னரே இடமாற்றத்தில் செல்லும் ஆசிரியர் விடுவிக்கப்பட வேண்டுமென ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக சகல மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கல்விச் சேவைச் சபைச் செயலாளர் திரு. எஸ். வீரரத்ன தெரிவித்துள்ளார்.

கஷ்டப் பிரதேசங்களில் அதிக காலம் சேவையாற்றியுள்ள ஆசிரியர்கள் தமது சொந்த இடங்களுக்கு மாறுவதற்குரிய வாய்ப்பை வழங்கக்கூடிய வகையிலும், நீண்டகாலமாக கடமையின் நிமித்தம் பிரிந்துவாழும் துணைவர் துணைவியர் இணைந்து சேவையாற்றக்கூடிய வகையிலுமான ஓர் இடமாற்ற வேலைத்திட்டம் ஒன்றை தயாரித்து நடைமுறைப்படுத்துமாறும் அவர்களைக் கேட்டுள்ளார்.

மேலும் ஆசிரியர்களை இடமாற்றுவதும், விடுவிப்பதும் தொடர்பாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் மாகாண கல்விப் பணிப்பாளர்களின் ஆலோசனையைப்பெற்று நடக்கவேண்டியது அவசியம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். [17]

போசாக்கின்மையால்

## காரைதீவு அகதிமுகாமில் 70 குழந்தைகள் மரணம்

கிழக்கு மாகாணத்தில் காரைதீவு அகதிகள் முகாமில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 70 குழந்தைகள் இறந்துள்ளனர்.

இவ் அகதிகள் முகாமில் சுமார் 564 குழந்தைகள் இருப்பதாகவும், இவர்களில் 70சதவீதத்திற்கு மேற்பட்ட குழந்தைகள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய கட்சி ஆரம்பிக்க ஹேமா திட்டமாம்

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவியுடன் அவரது மகன் சஜீவன் பிரேமதாசாவும் இணைந்து புதிய அரசியல் கட்சியொன்றை ஆரம்பிக்க உள்ளதாக கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக ஒசிஅபய குணசேகரவுடன் ஆலோசனை கலக்கப்பட்டதாகவும் அனேகமாக இக்கட்சியின் தலைவராக பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா செயல்படுவார் எனவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி - ஐக்கிய தேசியக் கட்சி இணைப்பால் அதிருப்தியுற்று வெளியேறுபவர்களும். சுதந்திரக்கட்சியிலிருந்து வெளியேறுபவர்களும் இக்கட்சியில் இணைந்துகொள்ளலாம் என எதிர் பார்க்கப்படுகிறதாம்.

மேலும்

பகுதிக்கு வந்து சேர்ந்தார். இன்னாசி சூசை (வயது33, 62 புதிய வீடமைப்புத் திட்டம் குருநகர்) என்பவரே இவ்வாறு வந்துசேர்ந்தார்.

பிரச்சினைக்கு

...க்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

அத்துடன் முன்னைய ஆட்சியினர் இழைத்த தவறுகளை இப்போதைய அரசு உணர்ந்திருப்பதாகவும், அமைதியையும், ஒற்றுமையையும் மீண்டும் ஏற்படுத்த தற்போதைய அரசு சமயோசிதமாக முயற்சித்து வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் வடக்கு, கிழக்கு மாகாண சபையினதும், பிரதேச சபைகளினதும் தேர்தல்களை நடத்துவதற்கு உரிய காலம் வந்துவிட்டதாகவும் பிரதமர் தமது உரையின் இறுதியில் குறிப்பிட்டார்.

## அறிவித்தல்

## மிக் கைத்தொழில் நிறுவனம்

எமது நிறுவனத்திற்கு பாடசாலை அப்பியாசப் புத்தகங்கள், உபகரணங்கள், அலுவலக காகிதாதிகள், எழுதுகருவிகள், அச்சக காகிதாதிகள், உபகரணங்கள் வந்துள்ளன.

அரச, தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், அச்சகங்கள், தனியார் வர்த்தக நிறுவனங்கள் தங்கள் தேவைக்கு உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

MIK Industries

Nadarajah compound
26 & 26/1 Sivan New Road,
Thirunelvely - JAFFNA.

(5513)



## யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

(கரும்புலிகள் நினைவாக)

போராளிக் கலைஞர்கள் ஒருங்கிணைந்து
விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம்
தயாரித்து வழங்கும்

**"தாயக கனவு"**

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி,
மாலை 4.00 மணி, 6.00 மணி

[சி6959]



## கொழும்பு ஸ்ரூடியோ

நினைவஞ்சலி, சரமகவிக்குத் தேவையான (*BLOCKS*) பழைய படங்களிலிருந்து - அந்தியேட்டிக்குத் தேவையான புகைப்படங்கள், உறுதியான றபர்சீல் - ஸ்ரிக்கேஸ் தேவைப்படும்போது எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**கொழும்பு ஸ்ரூடியோ**
**55, மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-6952)


## 45-ம் நாள் நினைவஞ்சலி

# ஜெயலலிதா உண்ணாவிரதம் பயனற்ற நடவடிக்கை -வாழப்பாடி

(சென்னை)

தமிழகத்திற்கு காவிரி நீரை கர்நாடக அரசு கொடுப்பதற்கு ஆவன செய்யப் படுமென்றுபிரதமர் உறுதியளித்திருப்பதாக தமிழ்நாடு இந்திராகாங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்திருக்கிறார்.

அது சம்பந்தமாக இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பிரதமரை சந்தித்துவிட்டு சென்னை திரும்பிய திரு. ராமமூர்த்தி நேற்று செய்தியாளரிடையே பேசுகையில்: காவிரி டெல்டாவில் தற்போது குருவைப்பயிர் வாடிப்போகாது இருக்க காவிரியில் தண்ணீர் திறந்துவிடப்படும் என பிரதமர் வாக்குறுதி அளித்திருப்பதாக குறிப்பிட்டார்.

முதலமைச்சரின் உண்ணாவிரத இறுதியில் அறிவிக்கப்பட்ட கண்காணிப்புக்குழுவும், மேல்மட்டக்குழுவும் ஒரு கண் துடைப்பு என்றார். அதே சமயம் காவிரி நடுவர் மன்ற இடைக்காலத்தீர்வைச் செயற்படுத்தும் சட்டரீதியான அமைப்பு ஒன்று உடனடியாக அமைக்கப்பட வேண்டுமென்றார்.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா உண்ணாவிரதத்தை பயனடையாமல் முடித்துக் கொண்டதாகவும் உண்ணாவிரதம் ஓர் அரசியல் ஏமாற்று நடவடிக்கை என்றும் திரு. வாழப்பாடி கருத்துத் தெரிவித்திருக்கிறார்.


## 45-ம்நாள் நினைவு அஞ்சலி அழைப்பிதழ்



## லெப்டினன்ட் கேணல் சாள்ஸ்/புலேந்திரன்

(கடற் புலிகளின் கடல் தாக்குதல் படைத் தளபதி)
(ஆனந்தராசா தவராசா)
திருக்கடலூர் திருமலை

பிறப்பு: 15-12-1960 வீரச்சாவு: 11-6-1993

திருமலையின் திருக்கடலூர் மண் பெற்றெடுத்த தவராசா
களம்பல கண்டாய் சாதனை பல செய்தாய்
கடலோடு படகேறி வீர சாதனையும் செய்தாய்
கிளாலிக் கடலினிலே தமிழீழ மக்களின் உயிரைக் காக்க
எதிரியின் குண்டுதனை ஏந்தி உந்தன் உயிர் ஈந்தாயே, புலேந்திரா


## தமிழ்க் குழுவின் சுவரொட்டி; பொலிசார் அகற்றினர்

வெலிக்கடை சிறையில் கொல்லப்பட்டவர்களுக்கு நினைவு கூர்ந்து கொழும்பில் தமிழ்க் குழுவினரால் ஒட்டப்பட்ட அஞ்சலி சுவரொட்டிகளை பொலிசார் உடனடியாக அப்புறப்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே 1983ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜூலை கலவர பத்தாம் ஆண்டு நிறைவையொட்டி நேற்று கொழும்பில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 24-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10533

வடபகுதிக்குஉள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
22-9005, 27-9772, 22-9193, 24-7084, 24-5703
27-5217, 27-2761, 26-2654, 27-5907, 27-0493
27-9825, 22-7271, 27-0113, 24-9390, 26-2291
41-9166, 26-5517.

## நினைவுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

1983ஜூலை மாதம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்டவர்களை நினைவு கூர்ந்து தீவக கோட்ட அரசியல் துறையினரால் நடாத்தப்படும் நினைவுக் கூட்டம் 27-ம்திகதி செவ்வாய்க்கிழமை இரவு நாவற்குழி லவனிதா குடியிருப்பில் நடைபெறும். விடுதலைப் புலிகள உறுப்பினர்கள் இக் கூட்டத்தில நினைவுரைகள் நிகழ்த்துவார்கள். (22)

## வைத்தியசேவை

(கொழும்புத்துறை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினர் நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டுக் கோவில் வீதியில் வைத்திய சேவை நிலைய அலுவலகம் ஒன்றை முதலாம் திருவிழா அன்று ஆரம்பித்துள்ளனர்.

இங்கு முதலுதவிச் சேவை, வைத்தியசேவை உட்பட அம்புலன்ஸ் வண்டி ஒன்றும் அலுவலகத்தில் நின்று 24மணித்தியால மும் சேவையை நடாத்துகின்றது. (24)

## ஆண்டு விழா

(வடமராட்சி)

நெல்லியடி திரு இருதய சன சமூக நிலைய ஆண்டு விழா இன்று நடைபெறும். இவ் விழாவில் கழகங்களுக்கிடை


## 8-ம் ஆண்டு குருபூஜை

தாயின் மடியில்
26 — 09 — 1913



முருகன் அடியில்
24 — 07 — 1985

## முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமி

ஆனந்தாச்சிரமம் – செல்வச்சந்நிதி
தொண்டைமனாறு

திதி: 1993-07-25

எட்டு ஆண்டு என்ன—என்பது
ஆண்டு சென்றாலும் எண்ணிலடங்கா
மக்கள் அன்னம் புசிக்கும் ஆனந்தமான
ஆனந்தாச்சிரமம் என்னும் அழியா விருட்சத்தை
உருவாக்கிய எங்கள் அருட்குருவே
உங்கள் அருளினாலும் அன்பர்கள் உதவியாலும்
அகந்தை கொள்ளாமல் ஆயிரம்ஆயிரம் அடியவர்களுக்கு
அன்னம் வழங்கி அன்புடன் பணிந்து
அன்னதானப் பணியை செய்து ஆனந்தமான
ஆச்சிரமத்தின் பெயரையும் அத்துடன்
அருட்குருவாகிய உங்களின் பெயரையும்

கொழும்பு ஸ்ருடியோ
55, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-6952)


## 45-ம் நாள் நினைவஞ்சலி



### கடற்புலி லெப். மகான்
[நவரெட்னம் தவராசா]

மலர்வு: 19-04-1973 வீரச்சாவு: 11-06-1993

(11-06-93 அன்று கிளாலிக்கடலில் கடற் படையுடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சா வடைந்தார்)

இந்த மண்ணில் மட்டுமென்ன
எங்களின் கடலிலும்
எதிரிகள் உலாவர இடங்கொடோம் என்றே
புலிகளின் அணியில் இணைந்த போர் மறவா!
வன்னி மண்ணில் வந்துதித்த எங்கள் செல்வமே!!
கிளாலிக் கரையை தொட்டுத்தழுவும்
அலையும், தென்றலும்
உன் வீரத்தை எடுத்தியம்ப
எம் விழியோரம் ஈரம் கசிந்தாலும்
உள்ளம் உருக்காதிட
பாதங்கள் உன் பாதச் சுவடுகளைத்தேடி

25-7-93 ஞாயிறு (இன்று) கடற்புலி மா வீரன் லெப்.மகானின் அந்தியேட்டிக்கிரியையில் சகபோராளி களையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

குடும்பத்தினர், உறவினர்

விநாயகர் வீதி,
நல்லூர்வடக்கு, யாழ்ப்பாணம். (5523)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


(கடற் புலிகளின் கடல் தாக்குதல் படைத் தளபதி)
(ஆனந்தராசா தவராசா)
திருக்கடலூர் திருமலை

பிறப்பு: 15-12-1960 வீரச்சாவு: 11-6-1993

திருமலையின் திருக்கடலூர் மண் பெற்றெடுத்த தவராசா
களம்பல கண்டாய் சாதனை பல செய்தாய்
கடலோடு படகேறி வீர சாதனையும் செய்தாய்
கிளாலிக் கடலினிலே தமிழீழ மக்களின் உயிரைக் காக்க
எதிரியின் குண்டுதனை ஏந்தி உந்தன் உயிர் ஈந்தாயே, புலேந்திரா
மக்களுக்காக மரணித்த மாவீரா
உன்னை யாம் மறவோம் மறவோம்.

சித்தப்பாமார்
குடும்பத்தினர்.

25-7-93 இன்று சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இன்பருட்டி,
அல்வாய் வடக்கு, அல்வாய். (5528)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 28-7-1970



வீரச்சாவு: 25-7-1991

### வீரவேங்கை கிறிஸ்ரி
(வேலுப்பிள்ளை வேதநாயகம்)

ஆகாயம் கடல் வெளி எங்கும்
அணி திரண்ட படை விரட்ட
ஓயாமல் நடந்த போரில் உன்னை உருக்கியவே!
கண்ணில் மறைந்து கருத்தில்நின்றாய்
காலம் எல்லாம் வாழும் பேறு உனக்கு!

சுழிபுரம் மேற்கு. — குடும்பத்தினர்
(5442)

துள்ளனர்.

இங்கு முதலுதவிச் சேவை, வைத்தியசேவை உட்பட அம் புலன்ஸ் வண்டி ஒன்றும் அலு வலகத்தில் நின்று 24மணித்தி யாலமும் சேவையை நடாத் துகின்றது. (24)

## ஆண்டு விழா
(வடமராட்சி)

நெல்லியடி திரு இருதய சன சமூக நிலைய ஆண்டு விழா இன்று நடைபெறும். இவ் விழாவில் கழகங்களுக்கிடை யிலான விளையாட்டுப் போட் டிகள் இடம்பெறும். (யோ)

## விளையாட்டு போட்டி
(வடமராட்சி)

இன்பருட்டி பாலர் பாட சாலை இல்ல விளையாட்டுப் போட்டி இன்று காண்டீபன் விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 2மணிக்கு நடை பெறும். பிரதம விருந்தினராக வடமராட்சி போரூட் நிறுவன திட்ட இணைப்பாளர் திரு. கோகுலதாஸ் கலந்து கொள் வார். (யோ)

## கிணற்றில் வீழ்ந்து மரணம்
(வடமராட்சி)

அல்வாய் மேற்கில் ஐந்து வயது சிறுமி ஒருவர் கிணற் றில் தவறுதலாக வீழ்ந்து மரணமானார்.

மகேஸ்வரன் துஷ்யந்தி என்ற சிறுமியே இவ்வாறு மரணமானவராவர். பிரேதபரி சோதனையை மேற்கொண்ட மரண விசாரணை அதிகாரி திரு வீ. நடராசா விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கி னார். (யோ)

## கல்விக் கருத்தரங்கு

க. பொ. த உயர்தரப் பரீட் சையில் தோற்றவுள்ள மாண வர்களுக்கான கல்விக் கருத்த ரங்கு, வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங் கத்தின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்யப்பட்டு உடுத் துறை மகா வித்தியாலயத்தில் கடந்த வாரம் முழுவதும் நடத்தப்பட்டது.

இக் கல்விக் கருத்தரங்கில் க. பொ. த உயர்தர பரீட் சைக்கான பாடங்கள் பற்றிய விரிவுரைகள் தேர்ச்சிபெற்ற விரிவுரையாளரால் நிகழ்த்தப் பட்டன. (36)


எட்டு ஆண்டு என்ன—எண்பது
ஆண்டு சென்றாலும் எண்ணிலடங்கா
மக்கள் அன்னம் புசிக்கும் ஆனந்தமான
ஆனந்தாச்சிரமம் என்னும் அழியா விருட்சத்தை
உருவாக்கிய எங்கள் அருட்குருவே
உங்கள் அருளினாலும் அன்பர்கள் உதவியாலும்
அகந்தை கொள்ளாமல் ஆயிரம்ஆயிரம் அடியவர்களுக்கு
அன்னம் வழங்கி அன்புடன் பணிந்து
அன்னதானப் பணியை செய்து ஆனந்தமான
ஆச்சிரமத்தின் பெயரையும் அத்துடன்
அருட்குருவாகிய உங்களின் பெயரையும்
அழிய விடாமல் ஆயுள்வரை காப்போம்.

25-07-1993 இன்று திரு. மு. மயில்வாகனம் சுவாமி அவர்களை நினைவு கூரும் முகமாக அவர் அமைத்த ஆனந்தாச்சிரமத்தில் மதியவேளை நடைபெறும் மகேஸ் வர பூஜையில் அன்பர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரை கலந்து சிறப்பிக்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு
செல்வச்சந்நிதி, ஆச்சிரம தொண்டர்கள்
ஆனந்தாச்சிரமம்,
தொண்டைமனாறு. (சி/7068)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 26-07-1968



உதிர்வு: 21-07-1988

செல்வி
### மாணிக்கம் தசந்தி
திதி ஸப்தமி: 1993 - 07 - 25

பாசத்துடன் நாம் வளர்த்தோம்
பாரிலே பல்லாண்டுகளிருப்பாயென நினைத்தோம்
பத்து இரண்டு வருடங்களில் - நீ
பயணத்தை முடித்து ஐயா சென்றவழி போய்விட்டாய்
ஆண்டுகள் ஐந்து கழிந்தாலும் - உன்
பிரிவு எமை நித்தமும் வாட்டுதம்மா.
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

14, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
உங்கள் பிரிவால் துயருறும்,
அம்மா, சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள், பெறாமக்கள்.
(5525)